கல்லணை கால்வாய் அமைப்பு திட்டத்தின் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கலுக்கான (ERM) சுற்றுச்சூழல் மற்றும் சமூக தொடர் செயல்பாடு செயலாக்க அறிக்கை சுருக்கம்:

திட்ட கண்ணோட்டம்:

கல்லணை கால்வாய் அமைப்பானது 148.65 கி.மீ நீளம் கொண்ட கல்லணை பிரதான கால்வாயையும், இணைக்கால்வாய்கள் உட்பட மொத்தம் சுமார் 1232 கி.மீ நீளமுள்ள கிளை கால்வாய்களின் விரிவான அமைப்பை உள்ளடக்கியது. பிரதான கால்வாய், இந்தியாவின் தமிழகத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி (5 கி.மீ), தஞ்சாவூர் (104 கி.மீ) மற்றும் புதுக்கோட்டை (39.65 கி.மீ) ஆகிய மூன்று மாவட்டங்களைக் கடந்து செல்கிறது. தமிழக அரசின் நீர்வளத்துறை (WRD), சீரான நீர் விநியோகம், பராமரிப்பு மற்றும் வெளியேற்றக் கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்த கல்லணை கால்வாயின் மறுசீரமைப்பு, புதுப்பித்தல், பழுதுநீக்கம் கூறுகளின் அவசியத்தை கண்டறிந்துள்ளது. கல்லணை கால்வாய் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தில் 16 சிப்பங்களாக செயல்பாடுகள் பிரிக்கப்பட்டு அவற்றில் 5 சிப்பங்கள் மட்டும் தற்போது பணிஆணை கடந்த 2020-2021 ம் ஆண்டு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடைபெற்றுவரும் 5 சிப்பங்களின் பணிகள் முன்னேற்றம் மற்றும் திட்டம் நடைபெறும் இடங்கள் கீழ்காணும் அட்டவணையில் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | அரசாணை எண். / மதிப்பீட்டுத் தொகை | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சிப்பம் எண்.1<br>தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கல்லணைக் கால்வாய் தொலைதூரம் 0.00 கி.மீ முதல் 12.624 கி.மீ வரை மற்றும் கல்லணைக் கால்வாய் எண்.1 வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.1 பின்புற வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.1 பி பின்புற வாய்க்கால், கிளை வாய்க்கால்கள் மற்றும் அதன் ஏரிகளை விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல் மற்றும் புனரமைக்கும் பணி. | அரசாணை எண்.282/PW (WR1) துறை நாள் 13.11.2020<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.173.00 கோடி | 63% பணி முடிவடைந்துள்ளது. |
| 2. | சிப்பம் எண்.2<br>தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மற்றும் பூதலூர் வட்டம், கல்லணைக் கால்வாய் தொலைதூரம் 12.640 கி.மீ முதல் 30.430 கி.மீ வரை மற்றும் கல்லணைக் கால்வாய் எண்.2 பின்புற வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.3 பின்புற வாய்க்கால் மற்றும் சக்கரா வாய்க்கால்கள் மற்றும் அதன் ஏரிகளை விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல் மற்றும் புனரமைக்கும் பணி. | அரசாணை எண்.282/PW (WR1) துறை நாள் 13.11.2020<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.192.00 கோடி | 67% பணி முடிவடைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 3, | சிப்பம் எண்.3<br>தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், பாபநாசம், மற்றும் ஒரத்தநாடு வட்டம், கல்லணைக் கால்வாய் தொலைதூரம் 30.430 கி.மீ முதல் 45.290 கி.மீ வரை மற்றும் கல்லணைக் கால்வாய் எண்.4 பின்புற வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.5 பின்புற வாய்க்கால் மற்றும் கல்லணைக் கால்வாய் எண்.5 ஏ பின்புற வாய்க்கால் மற்றும் அதன் ஏரிகைளை விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல் மற்றும் புனரமைக்கும் பணி. | அரசாணை எண்.282/PW (WR1) துறை நாள் 13.11.2020<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.169.00 கோடி | 73% பணி முடிவுற்றது. |

| வ. எண் | பணியின் பெயர் | அரசாணை எண். / மதிப்பீட்டுத் தொகை | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 4. | சிப்பம் 4<br>தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், பாபநாசம் மற்றும் ஒரத்தநாடு வட்டங்களில் கல்லணைக் கால்வாய் பிரதான வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.6 வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.7 வாய்க்கால், கல்லணைக் கால்வாய் எண்.8 பின்புற வாய்க்கால் மற்றும் கல்யாண ஓடை கிளை கால்வாய் தொலைவு 0.00 முதல 13.00 கி.மீ, குலமங்கலம் பிரதான வாய்க்கால், பருத்திக்கோட்டை வாய்க்கால் மற்றும் ஊட்டு ஏரி புனரமைக்கும் பணி. | அரசாணை நிலை எண். 282 / பொதுப்பணி (நீவது) துறை / நாள் 13.11.2020<br>மதிப்பீட்டுத்தொகை ரூ.265.00 கோடி | 57% பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்திலுள்ளது |
| 5 | தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை வட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி வட்டம் கல்லணை பிரதான கால்வாய் தொலைதூரம் 58.65 கி.மீ முதல் 92.20 கி.மீ வரை, அக்கரவட்டம் பிரதான வாய்க்கால், அலிவலம் வாய்க்கால், நடுவிக்கோட்டை வாய்க்கால், கல்லணை கால்வாய் எண்.13 வாய்க்கால், கல்லணை கால்வாய் எண்.14 வாய்க்கால் மற்றும் பாசனம் பெறும் ஏரிகளின் உள்கட்டமைப்பு களைபுனரமைக்கும்பணி. | அரசாணை நிலை எண். 282 / பொதுப்பணி (நீவது) துறை / நாள் 13.11.2020<br>மதிப்பீட்டுத்தொகை ரூ.237.70 கோடி | 50% பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்திலுள்ளது |

சுற்றுச்சூழல் மற்றும் சமூக தொடர் செயல்பாடுகள் மீதான மதீப்பாய்வானது தற்போது உள்ள 5 சிப்பங்களிள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக செயல்பாடுகள் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) வழிகாட்டு நெறிமுறைகளின்படி உள்ளதா என இந்திய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நிறுவனமான WAPCOS லிமிடெட் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

கண்டறியப்பட்டவைகள்:

தற்போதைய ஐந்து சிப்பங்களுக்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைத் திட்டத்தின் (ESMP) செயலாக்கத்தின் நிலை:

இந்த அறிக்கை, தற்போது நடந்துகொண்டு இருக்கின்ற, ஐந்து சிப்பங்களுக்கான, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைத் திட்டத்தின் (ESMP) நிலை குறித்த விரிவான செயல்பாட்டின் விளக்கத்தினை வழங்குகிறது. இந்த அறிக்கை ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் (AIIB) நிர்ணயிக்கப்பட்ட காரணிகளை உள்ளடக்கியுள்ளது. AIIB ESF-2019 இன்படி, வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் முக்கிய அலுவலர்கள் (சுற்றுச்சூழல் வல்லுநர், சமூக மேம்பாட்டு அதிகாரி மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அதிகாரி) போன்றவர்களுக்கு இது குறித்து பணி நடக்கும் ஐந்து சிப்பங்களில் ESMP பற்றி விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை பாதுகாப்புத் திட்டங்களைத் தங்களுக்குரிய சிப்பங்களுக்குச் சமர்ப்பித்து, திட்டத்தின்படி (ESMP) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சுற்றுச்சூழல் கண்காணிப்பு கூறுகளின் கீழ் காற்று, நீர், ஒலி மற்றும் மண்ணின் தரம் குறித்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக செயல்பாட்டுகளின் கீழ், சமூகம் மற்றும் தொழிலாளர்களுக்கு திட்ட விழிப்புணர்வு, சுகாதார விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து விளக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் மற்றும் திட்ட பகுதியில் உள்ள மக்களுக்கு உடல்நலம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்து, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) இன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக (E&S) வல்லுநர்களால் களப்பணி ஆய்வின் போது கண்காணிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தில் பங்கேற்பவர்களுடன் ஆலோசனை கூட்டங்கள்:

வழக்கமான ஆலோசனைகள், விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்யும் செயல்முறை உள்ளிட்ட பங்கேற்பவர்களுடன் நிலையான தொடர் ஈடுபாட்டை ESMP செயல்படுத்தல் ஆகியவற்றை கொண்டுள்ளது. திட்டம் அதன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு மேலாண்மை திட்டத்துடன் இணைந்திருப்பதை உறுதி செய்கிறது. கல்லணை கால்வாய் அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது, விவசாயிகளின் பிரச்சனைகள் மற்றும் குறைகள் கல்லணை கால்வாய் மற்றும் விவசாய நடைமுறைகள் தொடர்பான தேவைகள் குறித்து விவசாயிகள் மற்றும் பிற பங்கேற்பாளர்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்த ஆலோசனைகள் கவனத்தில் எடுத்துகொள்ளப்பட்டது.

குறை தீர்க்கும் அமைப்பு:

தற்போது பணிகள் நடைபெற்றுவரும் ஐந்து சிப்பங்களின் பணிதளத்திலும் மற்றும் திட்ட செயலாக்க அலுவலங்களிலும் புகார் பெட்டிகள் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்காக தனிதனியே வைக்கப்பட்டுள்ளன. மேலும் புகார் மனுக்கள் பெறப்பட்டு பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.